

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 11-07-2024

# மரண அரசியல் வேண்டாம்!

பகுஜன் சமாஜ் கட்சியின் தமிழ்நாடு தலைவர் - புத்த நெறியாளர் ஆம்ஸ்ட்ராங் படுகொலை செய்யப்பட்டு இருப்பது மிகக் கடுமையான கண்டனத்துக்குரியது. மூன்று மணிநேரத்துக்குள் குற்றவாளிகளைப் பிடித்திருக்கிறது தமிழ்நாடு காவல் துறை.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட இரங்கல் செய்தியுடன், குற்றவாளிகளின் கைது நடவடிக்கையும் இணைத்தே வெளியானதில் இருந்தே காவல் துறையின் துரிதமான நடவடிக்கையை உணர முடியும். **“பகுஜன் சமாஜ் கட்சியின் மாநிலத் தலைவர் ஆம்ஸ்ட்ராங் அவர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் பேரதிர்ச்சியையும் பெரும் வருத்தத்தையும் அளிக்கிறது. கொலையில் சம்பந்தப்பட்டவர்களைக் காவல் துறை இரவோடு இரவாக கைது செய்திருக்கிறது. வழக்கை விரைவாக நடத்தி குற்றவாளிகளுக்குச் சட்டப்படி உரிய தண்டனை பெற்றுத்தரக் காவல்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன்”** என்பதையும் சேர்த்தே முதலமைச்சர் அவர்கள் தெரியப்படுத்தினார்கள்.

ஆனால், எங்காவது ஏதாவது நடக்காதா, அதை வைத்து ஆதாயம் தேட முடியாதா என்று அலைபவர்கள், ஆம்ஸ்ட்ராங் கொலையை வைத்து தங்களது அசிங்கமான அரசியலை நடத்தினார்கள். மூன்று மணிநேரத்தில் குற்றவாளிகளைக் கைது செய்துவிட்டார்களே என்ற ஆத்திரத்தில், **‘இவர்கள் உண்மையான குற்றவாளிகள் இல்லை, உண்மையான குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை’** என்று கொக்கரிக்கிறார்கள்.

**முன்னாள் முதலமைச்சர் - ‘தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு’ புகழ் பழனிசாமி, ‘சரண் அடைந்தவர்கள் போலிகள்’ என்கிறார். இதனை ஒரு அரசியல் போலி சொல்வதுதான் ஆச்சரியமாக இருக்கிறது. ‘கைதானவர்கள் உண்மையான குற்றவாளிகள் இல்லை’ என்று இவருக்கு எப்படித் தெரியும்? இவரெல்லாம் ஒரு காலத்தில் காவல் துறையைக் கையில் வைத்திருந்தவர் என்பதை நினைக்கும் போது கேவலமாக இருக்கிறது.**

**‘துப்பாக்கிச் சூடா? 13 பேர் செத்துவிட்டார்களா? உங்களைப் போல நானும் டி.வி. பார்த்துத்தான் தெரிஞ்சுக்கிட்டேன்’ என்று சொன்னவர்தான் இந்த பழனிசாமி. சாத்தான்குளம் காவல் நிலையத்தில் இரட்டைக் கொலை நடந்த போது, ‘அவர்கள் உடல்நலமில்லாமல் இறந்தார்கள்’ என்று சொல்லி போலீஸைக் காத்தவர்தான் இந்த பழனிசாமி.**

ஜூலை 5 ஆம் தேதி இரவு 7.15 மணிக்கு ஆம்ஸ்ட்ராங் கொலை செய்யப்படுகிறார். கூடுதல் ஆணையர் ஆஸ்ரா கர்க் தலைமையில் 10 தனிப்படைகள் 8 மணிக்கே அமைக்கப்பட்டது. கண்காணிப்பு கேமராவை உடனே கைப்பற்றி, சம்பவ இடத்தில் இருந்த தடயங்கள் மூலமாக 3 மணி நேரத்துக்குள் எட்டுப் பேரைக் கைது செய்தது சென்னை காவல்துறை. கைதானவர்களில் முக்கியமானவர் பொன்னை பாலு என்பவர். கடந்த ஆண்டு பட்டினப்பாக்கத்தில் கொலை செய்யப்பட்ட ரவுடி ஆற்காடு சுரேஷ் என்பவரின் தம்பிதான் இந்த பொன்னை பாலு. தனது அண்ணன் கொலைக்கு பழி வாங்கவே ஆம்ஸ்ட்ராங்கை கொலை செய்ததாக பொன்னை பாலு ஒப்புக் கொண்டுள்ளதையும் காவல் துறையினர் வெளிப்படுத்தி இருக்கிறார்கள்.

**“ஆற்காடு சுரேஷ் வடசென்னையில் பெரிய ரவுடியாக இருந்தார். ஆம்ஸ்ட்ராங் அரசியல் ரீதியாக வளர்ந்து வந்தது எங்களுக்கு நெருக்கடியை ஏற்படுத்தியது. ஆம்ஸ்ட்ராங்கின் வலதுகரமாக இருந்த தென்னரசுவை 2015 இல் கொலை செய்தோம். அதில் இருந்து எங்களுக்குள் பகை வளர்ந்தது. ஜெயபால் என்பவரை சுரேஷுக்கு எதிராக ஆம்ஸ்ட்ராங் தூண்டிவிட்டார். இதனால் வடசென்னையில் இருந்து வேலூருக்கு நாங்கள் மொத்தமாக மாறினோம். ஆனாலும் பகை தொடர்ந்தது. ஆற்காடு சுரேஷை கடந்த ஆண்டு கொன்றார்கள். அந்த இடத்தை ஆம்ஸ்ட்ராங் வந்து பார்த்தார். ஆனால் வழக்கில் அவர் சிக்கவில்லை. பிறகு என்னையும் மிரட்டினார்கள். இதனால் என் மனைவி என்னை விட்டு பிரிந்து சென்றுவிட்டார். எனவே அவரை பழிதீர்க்க திட்டமிட்டோம். ஆற்காடு சுரேஷ் பிறந்தநாளில் இந்த கொலைச் செய்து சபதத்தை நிறைவேற்றினோம்”** என்று ஆற்காடு சுரேஷின் தம்பி பொன்னை பாலு வாக்குமூலம் கொடுத்திருப்பதை காவல் துறை பகிரங்கமாகச் சொல்லி இருக்கிறது. **“துப்பாக்கியால் ஆம்ஸ்ட்ராங் சுட்டால் முன்கூட்டியே வெடிகுண்டு வீச நினைத்திருந்தோம். ஆனால் அவரிடம் துப்பாக்கி இல்லை”** என்றும் சொல்லி இருக்கிறார் பொன்னை பாலு.

ஆனால் இவர்களை உண்மைக் குற்றவாளிகள் இல்லை என்கிறார் பழனிசாமி. அப்படியானால், உண்மைக் குற்றவாளிகளை அடையாளம் காட்ட வேண்டியது பழனிசாமியின் பொறுப்பே ஆகும். தனிப்பட்ட விரோதக் கொலையை சட்டம் ஒழுங்குடன் முடிச்சுப் போட்டு, தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு கெட்டுப் போனதாக கொக்கரிப்பது மரணவீட்டில் தேடும் மலிவான ஆதாயங்கள் ஆகும். அதைவிட இன்னொரு தரப்பு, ‘தமிழ்நாட்டில் தலித் படுகொலைகள் அதிகம் நடக்கிறது’ என்று சொல்வதும் திசை திருப்பும் அரசியல் ஆகும். தி.மு.க. ஆட்சியைக் குறை சொல்ல மட்டுமே துடிக்கும் சிலர், இதில் சந்தடி சாக்கில் உள்ளே நுழைந்து கல்லெறிந்து கொண்டிருக்கிறார்கள்.

கடந்த மூன்றாண்டு காலத்தில் பட்டியலின சமூகத்துக்கும், முன்னேற்றத்துக்கும் ஏராளமான திட்டங்களைத் தீட்டித் தந்த ஆட்சி தி.மு.க. ஆட்சி. இதனை அனைவரும் அறிவார்கள். விளிம்பு நிலை மக்களை கல்வி, அரசியல், பொருளாதாரம் ஆகியவற்றில் முன்னுக்குக் கொண்டு வரும் ஆட்சியாக இது நடைபெற்று வருவதைப் பொறுத்துக் கொள்ள முடியாத பொறாமைக்காரர்களின் புலம்பல்களை பொருட்படுத்தத் தேவையில்லை.

**“இந்தக் கொலையில் அரசியல் முன்பகை எதுவும் இல்லை என்பது முதல் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. இன்னும் சிலரைக் கைது செய்ய வேண்டி இருக்கிறது”** என்று கூடுதல் ஆணையர் ஆஸ்ரா கர்க் சொல்லி இருக்கிறார். அதற்குள் சமூக ஊடகங்களில் தங்கள் விருப்பத்துக்கு விசாரணைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள் சிலர்.

நடந்த கொடூர சம்பவத்துக்கு காரணமானவர்களை மூன்று மணிநேரத்துக்குள் கைது செய்துள்ளது காவல் துறை. அதிகாரிகள் மட்டத்தில் மிகப்பெரிய மாறுதலை முதலமைச்சர் அவர்கள் செய்திருக்கிறார்கள். இன்னும் சிலர் தேடப்பட்டு வருகிறார்கள். ஆனால் இந்தச் சம்பவத்தின் மூலமாக தி.மு.க. ஆட்சிக்கு களங்கம் ஏற்படுத்த நினைப்பவர்கள் வழக்கம் போல் ஏமாந்து போவார்கள்.

**அரசியல் செய்ய நினைப்பவர்கள், ‘மக்கள்’ அரசியலைச் செய்யுங்கள். மரண அரசியல் வேண்டாம்.**




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (9.7.2024) தலைமைச் செயலகத்தில், சட்டம் ஒழுங்கு குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள்துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், கூடுதல் காவல்துறை இயக்குநர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) செள. டேவிட்சன் தேவாசிர்வாதம், ஆவடி மாநகர காவல் ஆணையர் கி.சங்கர், தாம்பரம் மாநகர காவல் ஆணையர் முனைவர் அ.அமல்ராஜ், சென்னை மாநகர காவல் ஆணையர் ஆ.அருண் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### “இந்து” குழுமத்துடன் இணைந்து

# சுற்றுலாத்துறை - இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 2 நூல்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

**சென்னை, ஜூலை 11- முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு சுற்றுலாத்துறை மற்றும் இந்து குழுமம் இணைந்து தயாரித்துள்ள “FORTS OF TAMIL NADU - A WALK THROUGH” என்ற நூல் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை மற்றும் இந்து குழுமம் இணைந்து தயாரித்துள்ள நாட்டார் தெய்வங்களைப் பற்றி விளக்கிடும் “Folk Deities of Tamil Nadu” என்ற நூல் ஆகியவற்றை வெளியிட்டார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.7.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு சுற்றுலாத்துறையும் இந்து குழுமமும் இணைந்து தயாரித்துள்ள “FORTS OF TAMIL NADU - A WALK THROUGH” என்ற சுற்றுலா தகவல் களஞ்சிய நூல் மற்றும் இந்து சமய அறநிலையத்துறையும் இந்து குழுமமும் இணைந்து தயாரித்துள்ள நாட்டார் தெய்வங்களின் வரலாறு, வழிபாட்டு முறைகள் மற்றும் பண்பாட்டு முறைகள் ஆகியவற்றை விளக்கிடும் வண்ணப் புகைப்படங்களுடன் கூடிய “Folk Deities of Tamil Nadu” என்ற ஆங்கில நூல்களை வெளியிட்டார்.

தமிழ்நாடு சுற்றுலாத் துறை, இந்து குழுமத்துடன் இணைந்து “FORTS OF TAMIL NADU - A WALK THROUGH” என்ற நூலினை தயாரித்துள்ளது. சுற்றுலாத் துறையினர், இந்து குழுமத்தின் எழுத்தாளர்கள் மற்றும் சிறப்பு எழுத்தாளர்கள் தமிழ்நாட்டில் உள்ள புகழ்பெற்ற கோட்டைகளின் கட்டடக் கலை, பாதுகாப்பு சிறப்புகள், படை வலிமை, மேற்கொள்ளப்பட்ட சர்வதேச வர்த்தகம், அக்காலத்தின் அரசியல் நிகழ்வுகள், அவற்றை கட்டி எழுப்பியவர்களின் விவரம் மற்றும் கோட்டைகளை கைப்பற்ற நடைபெற்ற போர்கள் உள்ளிட்ட வரலாற்று சிறப்புகளை ஆராய்ச்சி கட்டுரைகள் மூலமாக ஆவணப் படுத்தும் 228 பக்கங்களை கொண்டதாக இந்த நூல் தயாரிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலகம் செயல்பட்டு வரும் சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டை, செங்கல்பட்டு மாவட்டம் சதுரங்க பட்டினம் (சத்ராஸ்) கோட்டை, ஆலம்பரை கோட்டை, திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி கோட்டை, விழுப்புரம் மாவட்டம் செஞ்சிக்கோட்டை, வேலூர் கோட்டை, கடலூர் மாவட்டம் செயின்ட் டேவிட் கோட்டை, மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி டேனிஷ் கோட்டை, கன்னியாகுமரி மாவட்டம் வட்டக்கோட்டை, திண்டுக் கல்கோட்டை, புதுக் கோட்டை மாவட்டம் திருமயம் கோட்டை, திருச்சிராப் பள்ளி மலைக்கோட்டை, பெரம்பலூர் மாவட்டம் ரஞ்சன்குடி கோட்டை, நாமக்கல் கோட்டை, சேலம் மாவட்டம் சங்ககிரி கோட்டை, கிருஷ்ணகிரி மாவட்டம் ராயக் கோட்டை, கிருஷ்ணகிரி கோட்டை ஆகிய 17 கோட்டைகள் உள்ளிட்ட தமிழ்நாட்டின் பல்வேறு முக்கிய கோட்டைகள் குறித்து இந்த நூலில் விளக்கப்பட்டுள்ளன.

இந்நூலின் பெரும்பகுதி இன்றைய கால புகைப்படங்களைக் கொண்டிருந்தாலும், சில காப்பகப் படங்கள் வாயிலாக கோட்டைகளின் கட்டடக் கலையையும், அமைப்பையும் விவரிக்கின்றது.

மேலும், இந்நூலானது, இந்திய வரலாற்றில் தமிழ்நாட்டின் பங்களிப்பைப் பற்றிய புரிதலை வலுப்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

**நாட்டார் தெய்வங்களை விளக்கிடும் நூல் வெளியீடு!**

நாட்டார் தெய்வங்களின் வரலாறு, வழிபாட்டு முறைகள், பண்பாட்டு முறைகள் ஆகியவற்றை கண்ணைக் கவரும் வண்ணப் புகைப்படங்களுடன் ஆவணப்படுத்தும் வகையில் இந்து சமய அறநிலையத்துறை மற்றும் இந்து குழுமம் இணைந்து ஆங்கிலத்தில் “Folk Deities of Tamil Nadu” என்ற நூலினை தயாரித்துள்ளது.

நாட்டார் தெய்வங்களின் வழிபாட்டு முறைகளிலும் அவற்றின் தன்மைகளிலும் விரைவான மாற்றங்கள் ஏற்பட்டு வரும் சூழலில் பாரம்பரியமிக்க இத்தெய்வங்களையும் அவற்றின் வரலாற்றையும் மீட்டெடுக்க உதவும் காலப் பெட்டகமாக இந்நூல் திகழும். இந்நூலினை தமிழில் மொழியாக்கம் செய்யும் பணிகள் இந்து சமய அறநிலையத்துறை மற்றும் இந்து குழுமத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிகழ்ச்சியில், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தர மோகன், சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சி.சமயமூர்த்தி, இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீ தரன், தி இந்து குழுமத்தின் தலைவர் மற்றும் வெளியீட்டாளர் திருமதி. நிர்மலா லக்ஷ்மண் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தஞ்சாவூர் மாவட்டம் –

# மேலவஸ்தாச் சாவடியில் ‘டைடல்’ பார்க் கட்டுமானப் பணிகள்!

## அமைச்சர்கள் அன்பில் மகேஸ் பொய்யாமொழி - டி.ஆர்.பி.ராஜா ஆய்வு!

தஞ்சை, ஜூலை 11- தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம் மேலவஸ்தாச்சாவடி அருகில் டைட்டல் பார்க் கட்டட கட்டுமானப் பணிகளை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தொழில் துறை அமைச்சர் டாக்டர். டி.ஆர்.பி.ராஜா ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் தீபக் ஜேக்கப், தலைமையில் நேற்று முன்தினம் (09.07.2024) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். இந்த ஆய்வில் சிப்காட் செயற் இயக்குநர் பி. ஆகாஷ், மாநிலங்களவை உறுப்பினர் எஸ்.கல்யாண சுந்தரம், தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, தஞ்சாவூர் சட்டமன்ற உறுப்பினர் டி.கே.ஜி. நீலமேகம், தஞ்சாவூர் மாநகராட்சி மேயர் சண் இராமநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம் மேலவஸ்தாச்சாவடி அருகில் 3.40 ஏக்கர் பரப்பளவில் 55,000 சதுர அடியில் ரூ 27.13 கோடி மதிப்பில் 4 அடுக்கு மாடி கட்டிடமாக டைட்டல் பார்க் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருவதைப் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

தஞ்சாவூர் மாவட்ட விவசாயிகளின் படித்த பிள்ளைகளுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தி தருவதற்காகவும், தொழில்நுட்ப புரட்சியை உருவாக்குவதற்காகவும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த டைட்டல் பூங்காவை அமைத்துள்ளார். இந்த டைட்டல் பூங்காவில் இது வரை 2 நிறுவனங்கள் தொடங்குவதற்கு உறுதி செய்யப்பட்டுள்ளது. இன்னும் 7 நிறுவனங்கள் தொடங்குவதற்கு காத்திருக்கின்றார்கள். எனவே, திறப்பதற்கு முன்பாகவே முழுமை அடைந்து விடும். இதன் மூலம் 1000க்கும் மேற்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க வாய்ப்புள்ளது என தொழில் துறை அமைச்சர் டாக்டர். டி.ஆர்.பி.ராஜா தெரிவித்தார்கள்.

அதனைத் தொடர்ந்து, தஞ்சாவூர் மாவட்டம் செங்கிப்பட்டி மற்றும் பாளையம்பட்டியில் சுமார் 256 ஏக்கரில் அமைக்கப்பட உள்ள சிப்காட் தொழிற்பேட்டை இடத்தினை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தொழில் துறை அமைச்சர் டாக்டர். டி.ஆர்.பி.ராஜா ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

இந்த ஆய்வின் போது, மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன், உதவி ஆட்சியர் (பயிற்சி) உத்கர்ஷ் குமார், மாவட்ட ஊராட்சித் தலைவர் திருமதி.ஆர்.உஷா புண்ணியமூர்த்தி, துணை மேயர் மரு. அஞ்சுகம் பூபதி, தஞ்சாவூர் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.இலக்கியா, வட்டாட்சியர்கள் அருள்ராஜ் (தஞ்சாவூர்), மரிய ஜோசப் (பூதலூர்) மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




தஞ்சாவூர் மாவட்டம் மேலவஸ்தாச்சாவடி அருகே புதியதாக கட்டி முடிக்கப்பட்டு தயார்நிலையில் உள்ள டைட்டல் நியோ பூங்காவின் கட்டுமானப்பணிகளை பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தொழில்துறை அமைச்சர் டாக்டர்.டி.ஆர்.பி.ராஜா, மாநிலங்களவை உறுப்பினர் சு.கல்யாணசுந்தரம் ஆகியோர் நேற்று முன்தினம் (09.07.2024) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். மாவட்ட ஆட்சித்தலைவர் தீபக் ஜேக்கப், சிப்காட் செயல் இயக்குநர் பி.ஆகாஸ், தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, தஞ்சாவூர் சட்டமன்ற உறுப்பினர் டி.கே.ஜி.நீலமேகம், மாநகராட்சி மேயர் சண்.இராமநாதன், மாவட்ட ஊராட்சித்தலைவர் திருமதி.உஷா புண்ணியமூர்த்தி, மாநகராட்சி துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி மற்றும் பலர் உடன் உள்ளனர்.